**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 255/2012**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 02.03.2026 |
| **பெயர்** | **ராஜேந்திரன்** |
| **த/பெ** | **துரை** |
| **சாட்சி** | **PW3** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.07.p.m**

**10 ம் பிரதிவாதி தரப்பில்**

**குறுக்கு விசாரணை–**

1. நான் பஞ்செட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரோஜா, சகுந்தலா மற்றும் கிளியம்மாள் மீது தாக்கல் செய்துள்ளார்கள், வேறு யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. என் தந்தை பெயர் துரை. என் தாத்தாவின் பெயர் முருகன். முனுசாமி என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது. காசி என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது. ஆறுமுகம் என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது. சரோஜா, சகுந்தலாவின் தந்தை பெயர் என்ன என்றால் சின்னக்கண்ணன்.

2. சின்னக்கண்ணன் உடன் பிறந்தவர்கள் யார் என்றால் கந்தசாமி, கண்ணன் மற்றும் கண்ணாயிரம். எனக்கு 63 வயது. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் கீழ்மேனி, அடம்பாக்கம். கீழ்மேனி மற்றும் அடம்பாக்கம் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 3 கி.மீ. பஞ்செட்டி க்கும் கீழ்மேனி க்கும் எவ்வளவு தொலைவு என்றால் 3 கி.மீ. மேற்சொன்ன

3 கிராமங்களில் சின்னக்கண்ணன், கந்தசாமி மற்றும் கண்ணன் ஆகிய 3 சகோதரர்களுக்கும் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றால் கீழ்மேனியில் 4 ஏக்கர், அடம்பாக்கத்தில் 1 ¼ செண்ட். எனக்கு எந்த ஊரில் நிலங்கள் இருந்தது என்றால் கீழ் மேனியில் நிலம் இருந்தது, அதை எங்கள் பெயரியவர்கள் காலத்தில் விற்றுவிட்டார்கள். நாங்கள் நிலத்தை விற்றுவிட்டதால் நாங்கள் ஊருக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. கந்தசாமிக்கு எங்கள் பெரியவர்கள் நிலம் விற்றார்களா என்றால் விற்றார்கள்.

3. எனக்கு காண்பிக்கப்படும் ஆவணத்தில் துரை என்பவரின் கையெழுத்து என் தகப்பனாரின் கையெழுத்தா என்றால் இல்லை வேறு ஒரு துரை என்பவரின் கையெழுத்து. நான் கூறிய மூவரும் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. யார் முதலில் இறந்தது என்றால் முதலில் கண்ணன் இறந்தார், இரண்டாவது கந்தாசமி இறந்தார், மூன்றாவது சின்னக்கண்ணன் இறந்தார். 1 மற்றும் 2 ம் வாதிகள் சின்னக்கண்ணனின் குமாரத்திகளா என்றால் ஆம். சரோஜாவிற்கு திருமணம் ஆகி புழல் கிராமத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். சகுந்தலா திருமணம் ஆகி சென்னை பெரம்பூரில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். சின்னக்கண்ணன் இறக்கும் வரையில் பஞ்செட்டியில் தான் இருந்தார் என்றால் சரிதான். சின்னக்கண்ணனின் பெயர் சின்னப்பன் என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்துக்கள் அவர்கள் மூவருக்கும் எப்படி பாத்தியப்பட்டது என்றால் 3 நபர்களும் சேர்ந்து கூட்டுக்குடும்பமாக வாங்கினார்கள். வாங்கும் போது நான் அருகில் இருந்தேனா என்றால் இல்லை.

4. அவ்வாறு இருக்கையில் மேற்சொன்ன சங்கதிகளை யார் மூலம் தெரிந்தது என்றால் பக்கத்தில் நிலம் இருப்பதால் நான் அவ்வாறு

கூறுகிறேன். கண்ணனின் மனைவி பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. கண்ணனின் மனைவி எதுவும் சொத்து வாங்கினாரா என்றால் வாங்கினார். சரோஜா மற்றும் சகுந்தலா என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்தில் பங்கு கோரி தாக்கல் செய்துள்ளனர். மேற்சொன்ன மூவரில் யார் பெயரியவர் என்றால் கண்ணன் தான் பெரியவர். பொதுவாக குடும்பத்தில் தந்தை தான் கர்த்தாவாக இருப்பார் அவர் இறப்பிற்கு பிறகு குடும்பத்தில் மூத்தவர் தான் கர்த்தாவாக செயல்படுவார் என்றால் சரிதான். மேற்சொன்ன மூவரில் கந்தசாமி தான் இளையவர் என்றால் சரிதான்.

5. சின்னப்பன் மற்றும் கண்ணன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை உயில் எழுதி கொடுத்துவிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சரோஜா மற்றும் சகுந்தலா எனக்கு என்ன உறவுமுறை என்றால் தூரத்து உறவு. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யார் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தது என்றால் 1 மற்றும் 2ம் வாதிகள். இருவரும் சேர்ந்தே அழைத்தார்களா என்றால் இருவரும் சேர்ந்து இந்த மாதம் தான் அழைத்தார்கள். சரோஜா இறந்து பல நாட்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து கிராமத்தில் எனக்கு எதும் நிலம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்து கிராமத்தில் எனக்கு எந்த நிலமும் கிடையாது என்றும் வாதிகள் தூரத்து உறவு என்ற முறையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 03.30.p.m.**